நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　Peoples Daily　　மக்கள் தினசரி

நாதம் 04　　திருவள்ளுவர் ஆண்டு 2024　　சித்திரை 25　　[08-05-93]　　சனிக்கிழமை　　ஓசை 79

## உயர் பதவி பெறுவதற்கு பட்டதாரிகளுக்கு சந்தர்ப்பம்

அரசாங்க, அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுநர் மற்றும் அதையொத்த சேவைகளில் தொழில் புரியும் பட்டதாரிகள் உயர் பதவிகளுக்கான தேர்வுகளுக்குத் தோற்றுவதற்கான வாய்ப்புக்களை விரிவு படுத்த பொது நிருவாக மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக அமைச்சு சகல திணைக்களத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள இல 2/93 சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்த சிறிலங்கா அரசாங்கம் தயாராயுள்ளது

## புதிய ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி அமைதியை ஏற்படுத்த தான் விரும்புவதாக சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தெரிவித்தார். பதவி ஏற்றபின் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், தலைவர்களுடன் தலைவர்கள் தான் பேசவேண்டும். பிரதி நிதிகளுடன் பேச்சு நடத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

பழைய பாணியில் அன்றி வித்தியாசமான முறையில், செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, விடுதலைப் புலிகளின் தலைவருடனேயே பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும், எந்த ஒரு நடுநிலைமை வாதிகளுடனும் பேசமாட்டேன் எனத் தெரிவித்தார். தலைவர்களுடன் தலைவரே பேசவேண்டும். அதைவிடுத்து முதலாம்தர, இரண்டாம்தர, பிரதிநிதிகளுடன் பேசுவதினால் காலதாமதம் மட்டுமே ஏற்படும் எந்த ஒரு பிரச்சினையும் தீர்க்கப்படமாட்டாது



என்றார்.

மேலும், விடுதலைப் புலிகள் இலங்கையில் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது. எனவே அவர்களை நிராயுதபாணிகள் ஆக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். என் முன்னே இன்று பயங்கரவாதம் உள்ளது. இதனை எப்படியும் விரட்டியடிப்பேன் என்றார்.

## புக்காரா குண்டுத்தாக்குதலில் 4 வீடுகள் தரை மட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள மருதோடை மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படையினரின் ''புக்காரா'' குண்டுவீச்சுவிமானங்கள் பலத்த குண்டுத்தாக்குதலை நடாத்தியுள்ளன.

நேற்றுக் காலை 7. 40 மணியளவில்இரண்டுபுக்காரா ரகத்தைச் சேர்ந்த குண்டு வீச்சு விமானங்கள் மேற்படி பகுதிகள் மீது பல தடவைகள் வட்டமிட்டன. தொடர்ந்து மூன்று தடவை பாரிய குண்டுகளைக் குடியிருப்புகள் மீது வீசின. இவற்றைவிட பல தடவை றொக்கட்தாக்குதல்களையும் நடாத்தின.

இக்குண்டுத் தாக்குதல் காரணமாக சுமார் 4 வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டதுடன் மேலும் பல குடியிருப்புக்கள் சேதமடைந்தன.

அத்துடன் இக்கிராமத்தில் உள்ள பாடசாலையும் பலத்த சேதமடைந்தது. பாடசாலையின் தளபாடங்கள் சுக்குநூறாகியது.

மேற்படி பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் சென்றதால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி–பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## மே 20 இல் பாராளுமன்றம் கூடும்

(கொழும்பு)

பாராளுமன்றம் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மீண்டும் கூடும் என நேற்று அறிவிக்கப்பட்டது.

## ஏகமனதாக விஜயதுங்கா ஜனாதிபதியாகத் தெரிவு

(கொழும்பு)

சிறிலங்காவின நிறைவேற்று அதிகாரம் கொண்ட புதிய ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்க ஏகமனதாகத் தெர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ... பாளர் நியமனப் பத்திரங்களைக் கோரும் உத்தியோக பூர்வ அறிவித்தலை பாராளுமன்றச் செயலாளர் நாயகம் விடுத்திருந்தார். அமைச்சர் விஜயபால மென்டிஸ் ஜனாதிபதி பதவிக்கு டி. பி. விஜயதுங்கவின் பெயரை முன்மொழி... மன்ற செயலாளர் நாயகம் அறிவித்தார்.

புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா கண்டியில் 1922 பெப்ரவரி 15-ம் திகதி பிறந்த இவர் 1946 இல் ஐ. தே. கவில் சேர்ந்தார். 1965இல் பொதுத் தேர்தலில் உடுநுவர பாராளுமன்ற உறுப்பினரானார்,

## மீட்பு நிதி சேகரிப்பு

நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் 10 மணி வரை மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்...

## ஹமில்டன் வனசிங்காவிற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

கூட்டுப்படை நடவடிக்கை தலைமைச் செயலக பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவைக் கொலை செய்யப் போவதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலைத் ... பெற்றது. திருமண வைபவத்தில் ஹமில்டன் கலந்துகொள்ளும் போது அவரை கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப் போவதாகக் கிடைத்த புலனாய்வு அறிக்கையைத் தொடர்ந்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. ரவிஜெயவர்த்தனாவின்மகன் பிரதீப்புக்கும் நிகால் கொரேயாவின் மகள் சானுக்கும் நடைபெற்ற இத் திருமணத்தில் லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வித்தியாசமான முறையில், செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, விடுதலைப் புலிகளின் த்தை நடத்தப்படும் என்றும், எந்த ஒரு நடுநிலைமை வாதிகளுடனும் பேசமாட்டேன் எனத் தெரிவித்தார். தலைவர்களுடன் தலைவரே பேச பிரதிநிதிகளுடன் பேசுவதினால் காலதாமதம் மட்டுமே ஏற்படும் எந்த ஒரு பிரச்சினையும் தீர்க்கப்படமாட்டாது என்றார்.

மேலும், விடுதலைப் புலிகள் இலங்கையில் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது. எனவே அவர்களை நிராயுதபாணிகள் ஆக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். என் முன்னே இன்று பயங்கரவாதம் உள்ளது. இதனை எப்படியும் விரட்டியடிப்பேன் என்றார்.

# ஏகமனதாக விஜயதுங்கா ஜனாதிபதியாகத் தெரிவு

(கொழும்பு)

சிறிலங்காவின நிறைவேற்று அதிகாரம் கொண்ட புதிய ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்க ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குண்டுவெடிப்பில் கொல்லபபட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி பதவி வெற்றிடம ஏற்பட்டது தெரிந்ததே. புதிய ஜனாதிபதி நேற்றுக் காலை சிறிலங்கா பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யபபட்டார். பாராளுமன்றம் சிறிலங்காவின் ஜனாதுபதி ஒருவரைத் தெரிந்தெடுத்தது இதுவே முதறதடவையாகும்.

சபாநாயகர் எம். எச். முகமத் தலைமையில் நேற்றுக் கூடிய பாராளுமன்றத்தில இத் தெரிவு மேற்கொள்ளப்பட்டது ஜனாதிபதி ஒருவர் மரணமடைந்தால் அவருக்குப் பதிலாக புதிய ஒருவரை பாராளுமன்றம் தெரிந்தெடுக்கும நடைமுறைகள் 1981ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தலகள் விசேட சரத்துக்கள் சட்டத்தில் அடங்கியுள்ளன.

இவற்றின் பிரகாரம் வேட்பாளர் நியமனப் பத்திரங்களைக் கோரும் உத்தியோக பூர்வ அறிவித்தலை பாராளுமன்றச் செயலாளர் நாயகம் விடுத்திருந்தார். அமைச்சர் விஜயபால மென்டிஸ் ஜனாதிபதி பதவிக்கு டி. பி. விஜயதுங்கவின் பெயரை முன்மொழி




ந்தார். அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீட் வழிமொழிந்தார்.

வேறு எவருடைய பெயரும் பிரேரிக்கப்படாததைத் தொடர்ந்து ஜனாதிபதி பதவிக்கு டி.பி விஜயதுங்க தெரிவு செய்யப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்தார்.

புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா கண்டியில் 1922 பெப்ரவரி 15-ம் திகதி பிறந்த இவர் 1946 இல் ஐ. தே. கவில் சேர்ந்தார். 1965இல் பொதுத் தேர்தலில் உடுநுவர பாராளுமன்ற உறுப்பினரானார், 1977இல் தகவல்துறை ஒலிபரப்பு அமைச்சராகவும், 1978 இல் மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும், தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சராகவும், 1987 இல் விவசாய அபிவிருத்தி சபை அமைச்சரானார். பின்னர் வடமேல் மாகாண ஆளுநராக பதவி வகித்த இவர் 1989இல் நிதியமைச்சராகவும், பிரதம மந்திரியாகவும், ரஞ்சன் மரணத்தைத் தொடர்ந்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராகவும் ஆனார்.

பாராளுமன்ற சபாநாயகர், சிறிமாவோ பண்டாரநாயக்கா, தினேஷ் குணவர்த்தன, தொண்டமான் அத்தாவுட செனவிரத்தின, எம். எச். எம். அஷ்ரப் புதிய ஜனாதிபதியை வாழ்த்திப் பேசினர்.



புலோப்பளை அறத்தி அம்மன் கோயில் மீது நேற்று முன்தினம் புக்காரா விமானம் நடாத்திய தாக்குதலில் சேதமடைந்த கோயிலின் ஒரு பகுதியையும் குண்டுத் தாக்குதலினால் ஏற்பட்ட பாரிய குழியினையும் படத்தில் காணலாம்.

## மீட்பு நிதி சேகரிப்பு

நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் 10 மணி வரை மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் நாளை தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்பு நிதிப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## ரணில் விக்கிரமசிங்கா இளவயதுப் பிரதமர்

சிறிலங்காவின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கா 24 மார்ச் 1949இல் பிறந்தவர். கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்று இலங்கைப் பல்கலைக் கழகத்தில் எல். எல். பி. (சட்டத்தரணி) பட்டம் பெற்றார்.

1972இல் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணமசெய்து கொண்ட ரணில் கொழும்பில் சட்டத்தரணி தொழில் பார்த்தார்.

1977 ஜூலை பொதுத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பைகம தொகுதியிலிருந்து தெரிவான ரணில், வெளிவிவகார பிரதி அமைச்சராக நியமனம் பெற்றார். இப் பதவிக்கு நியமனமபெற்ற வயது குறைந்த பாராளுமன்ற உறுப்பினர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா



வின் அமைச்சரவையில்ரணில், இளைஞர் விவகாரம், கல்வி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அமைச்சரவை தெரிவு; அனைவரும் பழைய முகம்

[கொழும்பு]

புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவினால் நியமிக்கப்பட்ட இருபத்திரண்டு அமைச்சர்களும் நேற்று ஜனாதிபதி முன்னிலையில், பதவிப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டனர்.

அமைச்சர்களின் பெயர்களும் அவர்கள் ஏற்றுக்கொண்ட அமைச்சுக்களின் விபரமும் வருமாறு:

ரணில் விக்கிரமசிங்க - பிரதமர், கைத்தொழில், விஞ்ஞானம், தொழில்நுட்பத்துறை அமைச்சுகள்.

விஜேபால மென்டிஸ் - போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு.

ஏ.ஸி.எஸ். ஹமீத் - நீதி அமைச்சு.

பெஸ்டஸ் பெரேரா - பொது நிர்வாக மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

எஸ். தொண்டமான் - சுற்றுலா கிராமியத் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

"புக்காரா" குண்டுவீச்சு விமானங்கள் பலத்த குண்டுத்தாக்குதலை நடாத்தியுள்ளன.

நேற்றுக் காலை 7. 40 மணியளவில்இரண்டுபுக்காரா ரகத்தைச் சேர்ந்த குண்டு வீச்சு ... தடவை றொக்கட்தாக்குதல்களையும் நடாத்தின.

இக்குண்டுத் தாக்குதல் காரணமாக சுமார் 4 வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டதுடன் ... றாகியது.

மேற்படி பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் சென்றதால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

# ஹமில்டன் வனசிங்காவிற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

கூட்டுப்படை நடவடிக்கை தலைமைச் செயலக பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவைக் கொலை செய்யப் போவதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலைத் தொடர்ந்து அவரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பேரனின் திருமணம் கடந்த வியாழனன்று டச்சு றிபோம் ஆலயத்தில் நடைபெற்றது. திருமண வைபவத்தில் ஹமில்டன் கலந்துகொள்ளும் போது அவரை கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப் போவதாகக் கிடைத்த புலனாய்வு அறிக்கையைத் தொடர்ந்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

ரவிஜெயவர்த்தனாவின்மகன் பிரதீப்புக்கும் நிகால் கொரேயாவின் மகள் சானுக்கும் நடைபெற்ற இத் திருமணத்தில் லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உள்ளிடப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## வெடிகுண்டுடன் புலிகள்; கொழும்பில் தேடுதல்

[கொழும்பு]

கொழும்பு நகருக்குள் விடுதலைப் புலிகளின் வாகனங்கள் வெடிகுண்டுகளுடன் ஊடுருவியிருப்பதாகக் கூறப்படுவதையடுத்து கொழும்பில் நேற்றுக்காலை இராணுவத்தினர் திடீர் சோதனைகளில் ஈடுபட்டனர். வாகனங்கள் வீதிகளில் வைத்து வழிமறிக்கப்பட்டு இராணுவத்தால் சோதனையிடப்பட்டன.

ஒருவாரத்திற்கு முன்னரும் இவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்டு சோதனைகள் மேற்கொளப்பட்டதுதெரிந்ததே.

## பிரேமாவின் ஆளுமையை பத்திரிகைகள் அழித்தன

### ரணில் விக்கிரமசிங்கா தெரிவிப்பு

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை பத்திரிகைகளின் ஒருபகுதி தாக்கியது. முதலில் அவரது ஆளுமை அழிக்கப்பட்டது. பின்னர் அவர் அழிக்கப்பட்டார் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா கூறினார்.

கொழும்பு கிராமோதய மண்டபத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

பிரேமதாசா மரணம் குறித்துக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றனவா என்று செய்தியாளர் கேட்டபோது நான் கொண்டாட்டங்கள் பற்றிக் கேள்விப்படவில்லை. சில பட்டாசுகள் தான் வெடித்தன. பட்டாசுகள் வெடிப்பதைக் கொண்டாட்டமாக மாற்றக் கூடாது என்றார் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா. இக் கேள்வி அநியாயமான கேள்வி என்றும் கூறினார்.

## ஜனாதிபதி பதவியில் ஹேமாவிற்கு ஆசை!

### பி.பி.ஸி. தெரிவிப்பு

(கொழும்பு)

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசா சிறிலங்காவின் ஜனாதிபதிப் பதவியில் ஆசை வைத்திருப்பதாக பி.பி ஸியின் கொழும்பு முகவராக முன்னர் பணிபுரிந்த கிறிஸ் மொறிஸ் கூறியுள்ளார்.

சிறிலங்கா அடுத்தது என்ன என்ற தலையங்கத்தின் கீழ் பி.பி.ஸி. நேற்றிரவு ஒலிபரப்பிய செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் மேலும் குறிப்பிடுகையில், இரண்டு வாரங்களுக்குள் இரண்டு முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டுவிட்டமையால் இலங்கை அதிர்ச்சி அடைந்து உள்ளது. கொலை ஒரு அரசியல் பகை தீர்க்கும் வழியாக இங்கு ஆகிவிட்டது.

தற்போது இலங்கையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

கடைச்சல் பட்டடை (லேத்) வேலையில் நன்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளர் தேவை சனி, ஞாயிறு நாட்களில் காலை 9மணி, மாலை 5மணிக்கு நேரில் சமுகம் தரவும். தொடர்பு:- ஜொனி வாகன சுத்திகரிப்பு நிலையம், கல்வியங்காடு சட்டநாதர் கோவில் முன்பாக. (4828)

### விற்பனைக்கு

'சுவை அரசி' பெயர் பொறிக்கப்பட்ட மோர் மிளகாய், ஊறுகாய், வடகங்கள், அரிசிமா முதலியன மீசாலை மகளிர் சங்கத் தயாரிப்புகள் விற்பனையாகின்றன. (3397)

### கார்கசற் ரேடியோக்களா கடிகாரங்களா?

மேர்குறிப்பிட்டவை யாதேனும பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து; பழுதையும், செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி. குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள், டில்கா வாச்அன் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6584)

### Your Watches & Radios

Repairs of Wate es&Radios Gurunteed DILKA WATCH& RADIO ORKS, 284 S anley Road, Ariyakulam Junction, Jaffna Branch: Kandy Road Chavakachcheri. (சி-6541)

### மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் 1993, சுன்னாகம்ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று மாலை 2.00மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் திரு. கா. சந்திரராஜாவின் தலைமையில் நடைபெறவுள்ளது பிரதம விருந்தினராக விளையாட்டுப பணிப்பாளர் வடக்கு கிழக்கு மாகாணசபை திரு எஸ். மரியதாஸ் அவர்களும், மேலும் உதவி விளையாட்டுப்பணிப்...

## கெற்பலி குடியிருப்புக்கு பாடசாலை இடமாற்றம்

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் வசித்துவரும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை கருத்தில் கொண்டு புங்குடுதீவு சண்முகநாத வித்தியாசாலை கெற்பலியில் இயங்குவதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இப்பாடசாலையின் அதிபர் திரு. சண்முகவடிவு அவர்கள் நேற்று தொடக்கம் இப்பாடசாலை இயங்கத் தொடங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்

இதற்கு முன்னர் தென்மராட்சி கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த சாவகச்சேரி / கமலாசினி வித்தியாலயத்தின் கிளை ஒன்று இங்கு இயங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. (90)

## அறிவித்தல்

### வ.இ.ச. சபை அறிமுறைப்பரீட்சை 1993

நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக, 1993 05 15, 1993 05 16 ஆகிய இருதினங்களில் நடைபெறவிருந்த மேற்படி சபையின் அறிமுறைப்பரீட்சை மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என்பதை தேர்வுநாடிகளுக்கு அறியத்தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்,
யாழ்மாவட்டக்கல்விப்பணிப்பாளரும்,
வ. இ. ச. சபைத்தலைவரும்.
(சி/6576)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 30 - 01 - 1972

தாயக மண்ணில் 08 - 05 - 1989

### வீரவேங்கை ஜனா

[யோகசுந்தரம் ஐங்கரன்]

எங்கள் அன்புச் செல்வமே ஐங்கரா
எங்கள் வீரச் செல்வனே ஜனா
உன்னழகுமுகம் தினம்தினம் எம் முன் தெரியுதடா-ஜனா
அம்மாவை காணவந்தாய் அன்பாக ஒரு நாள் - ஜனா
அருகில் வந்து கொடுத்தாய் ஓர் முத்தம்
அப்போது தெரியவில்லை கடைசிதான் என்று
கடைசியாய் பிறந்தாய் நீ எமக்கு - ஜனா
பதினெட்டு வயதினிலும் உன்பால் வடியும்
முகம் பார்த்தால் பசி தீருமடா - ஜனா
ஜனா என்னும் பெயருடனே
இனிய தமிழ் மண்ணுக்காய் புறப்பட்ட வேளையில்
இனனுயிரை அர்ப்பணித்த - வீரனே
உன் கொள்கை நிறைவேறுமடா ஒரு நாள்
ஆறுமோ எங்கள் உள்ளம்
எங்கள் உள்ளத்தில் என்றும்
ஒளி வீசும் உன்னழகு

## இரத்ததானம் செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தை ஸ்தாபித்தவருடைய ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு இந்நாடல் செஞ்சிலுவைதொண்டர்கள்இரத்த தானம் செய்யும்படி இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை கேட்டுக் கொண்டுள்ளது.

உறுப்பினர்கள், தொண்டர்கள், அன்பர்கள் இரத்த தானம் செய்யவிரும்பின்எமது கிளையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் (பா)

## நியூட்டன் அக்கடமி

இருபாலை றோட் கோண்டாவில்

(O/L DAY CLASS இற்கு தனித்துவமான ஒரே ஒரு நிறுவனம்)

### O/L DAY CLASS- 1993

பிரிவு- II

வரலாறு சமூகக் கல்வி- **திரு. கணேஷ்**

ஆரம்பம்:- 9-5-93 பி. ப. 4 மணி

முக்கிய குறிப்பு:-

★ வரலாறு சமூகக்கல்வி செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய 4 தினங்களிலும் பகல் வேளைகளில் நடைபெறும்.

★ முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள். (4835) - நிர்வாகி

## 5-ம் ஆண்டு நினைவலைகள்



சங்கரப்பிள்ளை சிவவரதன் (வரதன்)

(மகாஜனாக் கல்லூரி வர்த்தகப்பிரிவு மாணவன்)

தாயின் மடியில்: 11-10-1969

இறைவன் அடியில்: 08-05-1988

அன்பின் இலக்கணமாப் ஆருயிராய் வாழ்ந்தவனே
ஆயிரம் நினைவுகளை இதயத்தில் சுமந்தவனே
இன்பம் என்பதையே எல்லோர்க்கும் ஈந்தாயே
ஈசன் அடியே பெரிதென்று எமைப்பிரிந்து சென்றாயே
உன்னைப் பிரிந்து ஐந்தாண்டுகள் வேதனையில்

## சர்வதேச பள்ளிகளுக்கு உலகவங்கி நிதி உதவி

(கொழும்பு)

சிறிலங்காவில் உள்ள சர்வதேசப் பள்ளிக் கூடங்களுக்கு நிதி உதவி வழங்கி தனியார் மயப்படுத்தலை ஊக்குவிக்க உலகவங்கி ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது சர்வதேசப் பள்ளிக் கூடங்கள் கம்பனிச்சட்டத்தின் கீழ் வியாபார நிலையங்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன

உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி கொழும்பிலுள்ள சர்வதேசப் பள்ளிக் கூடங்களுக்கு விஜயம் செய்து நிதி உதவி பெறுவதற்குத் தகுதி உள்ள பாடசாலைகள்குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலக வங்கி சிறிலங்கா அரசுக்கு வழங்கும் நிதிஉதவியின் ஒரு பகுதியாக இந்த உதவி அமையவுள்ளது.

கொழும்பிலுள்ள சர்வதேசப் பள்ளிக் கூடங்கள் ஆங்கில நாட்டுக் கல்வி முறையைப் பின்பற்றி லண்டன் க. பொ. த சாதாரணம் லண்டன் க.பொ. த. உயர்தரப் பரீட்சைகளுக்கு மாணவரைத் தயார் செய்கின்றன.

அமெரிக்க முறையில் அமைந்த இடை நிலைக் கல்வியை அறிமுகப்படுத்தவே உலக வங்கி நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. ''உலக வங்கியின் தனியார் கல்விச் செயற்திட்டம்'' என்ற திட்டத்தின் கீழே இந்த நிதிஉதவி வழங்கப்படவுள்ளது.

லண்டன் கிறீன்போர்ட் பகுதியில்

## மனைவியைக் கொன்றவர் தாமும் தற்கொலை

யாழ். வாசிகளுக்கு நடந்த பரிதாபம்

[லண்டன்]

லண்டனில் மனைவியைப் பிரிந்துவாழும் கணவர், மனைவியைச் சுட்டுக் கொன்று, தானும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் மேற்கு லண்டனில் கிறீன்போர்ட்என்ற இடத்தில் நடந்துள்ளது.

பெற்றோரை இழந்த ஒன்பது வயதுச் சிறுவன் உறவினரின் பாதுகாப்பில் உள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது, சாவகச்சேரியைச் சேர்ந்த இக்குடும்பத்தில் அடிக்கடி சச்சரவு ஏற்பட்டதால் கணவன் -மனைவி பிரிந்து வாழ்ந்தனர். ஒரே வீதியில் அருகருகே வாழ்ந்து வந்தனர்.

கடந்த புதனன்று சந்திரன் ராஜதாசன் பிரச்சினை பற்றிப பேசித் தீர்க்கத் தனது மனைவி கீதாவை அழைத்துள்ளார். சிறிது நேரம் கழித்து கீதா பின்னால் வந்த மகனும் கீதாவின் சகோதரரும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களைக் கேட்டனர்.

பொலிஸ் அழைக்கப்பட்டது சிறிது நேரத்தின் பின் மேலும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. பொலிஸார் அறையில் பிரவேசித்த சமயம். இறந்து கிடந்த கீதாவின் பக்கத்தில் கணவர் குற்றுயிரில் கிடந்தார். பிற்பாடு அவரும் ஆஸ்பத்திரியில் காலமானார்.

## அமைதி

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முதம் தினம் இரவுமுதல் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு நேற்றுக்காலை தளர்த்தப்பட்டது. நகரம் முழுவதும் அமைதியாக இருந்ததாகவும், எந்த வன்முறைச் சம்பவங்களும் இடம் பெற்றதாகத் தகவல் கிடைக்கவில்லை என்றும் சிறிலங்கா அரசு கூறியுள்ளது.

சிறுவர் போசாக்கு நிலைய நிதிக்காக

மாபெரும்

### மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

இடம்: நீர்வேலி சவாரி மைதானம்
காலம்: 09-05-93 (நாளை) ஞாயிறு
நேரம்: பிற்பகல் 02.00 மணி

Road Chavakachcheri.

(சி-6541)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் 1993, சுன்னாகம்ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று மாலை 2.00மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் திரு. கா. சந்திரராஜாவின் தலைமையில் நடைபெறவுள்ளது பிரதம விருந்தினராக விளையாட்டுப பணிப்பாளர் வடக்கு கிழக்கு மாகாணசபை திரு எஸ். மரியதாஸ் அவர்களும், மேலும் உதவி விளையாட்டுப்பணிப்பாளர் வடக்கு. கிழக்கு திரு. ஏ. எஸ் குணரட்ணம், மாவட்ட விளையாட்டு அதிகாரி யாழ் செயலகம் திரு. அ. கனகராசா அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வீரவேங்கை ஜனா

[யோகசுந்தரம் ஐங்கரன்]


எங்கள் அன்புச் செல்வமே ஐங்கரா
எங்கள் வீரச் செல்வனே ஜனா
உன்னழகுமுகம் தினம்தினம் எம் முன் தெரியுதடா-ஜனா
அம்மாவை காணவந்தாய் அன்பாக ஒரு நாள் - ஜனா
அருகில் வந்து கொடுத்தாய் ஓர் முத்தம்
அப்போது தெரியவில்லை கடைசிதான் என்று
கடைசியாய் பிறந்தாய் நீ எமக்கு - ஜனா
பதினெட்டு வயதினிலும் உன்பால் வடியும்
முகம் பார்த்தால் பசி தீருமடா - ஜனா
ஜனா என்னும் பெயருடனே
இனிய தமிழ் மண்ணுக்காய் புறப்பட்ட வேளையில்
இன்னுயிரை அர்ப்பணித்த - வீரனே
உன் கொள்கை நிறைவேறுமடா ஒரு நாள்
ஆறுமோ எங்கள் உள்ளம்
எங்கள் உள்ளத்தில் என்றும்
ஒளி வீசும் உன்னழகு

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

'யோகஸ்தான்'
அலுக்கை, அளவெட்டி.
08-05-1993

அப்பா, அம்மா, அண்ணன்மார்
அண்ணி

(4795)



## சங்கரப்பிள்ளை சிவவரதன் (வரதன்)

(மகாஜனாக் கல்லூரி வர்த்தகப்பிரிவு மாணவன்)

| தாயின் மடியில்: | இறைவன் அடியில்: |
|---|---|
| 11-10-1969 | 08-05-1988 |

அன்பின் இலக்கணமாப் ஆருயிராய் வாழ்ந்தவனே
ஆயிரம் நினைவுகளை இதயத்தில் சுமந்தவனே
இன்பம் என்பதையே எல்லோர்க்கும் ஈந்தாயே
ஈசன் அடியே பெரிதென்று எமைப்பிரிந்து சென்றாயே
உன்னைப் பிரிந்து ஐந்தாண்டுகள் வேதனையில்
ஊசலாடுகிறது எம் இதயங்கள் உன் நினைவலையில்.

உன் ஆத்மசாந்திக்கு இறைவனை வேண்டும்

நகுலேஸ்வரா வீதி,
கருகம்பனை,
காங்கேசன்துறை.

அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பிமார், தங்கை, நண்பர்கள்,
உறவினர்கள்.

(4804)

கடந்த புதனன்று சந்திரன் ராஜதாசன் பிரச்சினை பற்றிப பேசித் தீர்க்கத் தனது மனைவி கீதாவை அழைத்துள்ளார். சிறிது நேரம் கழித்து கீதா பின்னால் வந்த மகனும் கீதாவின் சகோதரரும் துப்

...நேற்றுக்காலை தளர்த்தப்பட்டது. நகரம் முழுவதும் அமைதியாக இருந்ததாகவும், எந்த வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றதாகத் தகவல் கிடைக்கவில்லை என்றும் சிறிலங்கா அரசு கூறியுள்ளது.

சிறுவர் போசாக்கு நிலைய நிதிக்காக

மாபெரும்

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

இடம்: நீர்வேலி சவாரி மைதானம்
கால: 09-05-93 (நாளை) ஞாயிறு
நேரம்: பிற்பகல் 02.00 மணி

ஏ. பி, சி ஆகிய பிரிவுகளுக்கான போட்டிகள் நடைபெறும்.

பிரவேசம்: ரூபா 10/-

(சி-6588)

அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

ஏழாலை தெற்கு தமிழ்ப்பொதுப்பணி மன்ற பல்துறை வளர்ச்சி நிதிக்காக

# மாபெரும் நாடக விழா



இடம்: இராமநாதன் கல்லூரி
மருதனார்மடம்

காலம்: இன்று 08. 05. 93
மாலை 7. 30 மணிக்கு

அரிச்சந்திரனாகவும், சந்திரமதியாகவும் இணைந்து நடித்து இலட்சக்கணக்கான மக்களின் பாராட்டைப்பெற்ற

''இந்தமண் எங்களின் சொந்தமண்'' புகழ்
S. G. சாந்தன் சத்தியவானாகவும்
அரியாலையூர் நடிக கலாமணி
V. செல்வம் சாவித்திரியாகவும்
இணைந்து வழங்கும்

அரியாலையூர் கலைமகள் கலைஒளி நாடகமன்றத்தின் 2-வது பிரமாண்டமான தயாரிப்பான

# சத்தியவான் சாவித்திரி

புராண இசை நாடகம்

டிக்கட்டுகள் - நுழைவாயிலில்
ரூ. 15.00, ரூ. 10.00

விளம்பர அன்பளிப்பு:

ரவி அன் ராஜ் சில்க்ஸ்
77, பெரியகடை, யாழ்ப்பாணம்.

இளந்தென்றல் படப்பிடிப்பாளர்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சோதி கலர் படப்பிடிப்பாளர்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

துரை பேக்கவுஸ்
சூராவத்தை, சுன்னாகம்.

சிவஸ்ரீ வர்த்தக நிலையம்
உரும்பராய் வடக்கு, உரும்பராய்.

(4829)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-08

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

ரகுமான்
யூலியன்
ரகீம்

1987 ஆம் ஆண்டு மட்டு-வந்தாறுமூலையில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

சுதா (ஐயாத்துரை சுதாகரன்-வந்தாறுமூலை - மட்டு)
தம்பி (இராசமணி தவராசா-வந்தாறுமூலை-மட்டு)

மட்டு-தளவாய்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

நடா (முத்துப்பிள்ளை சந்திரன்-களுவங்கேணி-மட்டு)

1989 ஆம் ஆண்டு யாழ்-தெல்லிப்பழையில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

ஜனா (யோகசுந்தரம் ஐங்கரன்-'யோகஸ்தான்'' அலுக்கை, அளவெட்டி-யாழ்)

புங்குடுதீவில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்,

கந்தவேள்

1991 ஆம் ஆண்டு வவுனியா கோழியாகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

கப்டன் ரவி (பாலசிங்கம் ஜெயக்குமார்-''பொற்பதி வீதி'' கொக்குவில் கிழக்கு -யாழ்)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6583)

சிந்தனைக்கு

நேர்மையான அரசியல்வாதி என்பவர் தான் விலை போன பின்பு, விலை கொடுத்து வாங்கியவர்க்கு விசுவாசமாய் இருப்பவர்.

- சைமன் கேமரான்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## புதிய ஜனாதிபதியும் இடைக்காலப் பதவியும்

மரணமடைந்த சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் பதவிக் கால வெற்றிடத்தை திரு.டி.பி. விஜயதுங்கா நிரப்பவுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி திரு. டி பி. விஜயதுங்காவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதென ஏகமனதாக முடிவு செய்த வேளையில் இருந்து இந்நியமனம் உறுதிப்பட்டது என்றே கொள்ளலாம்.

திரு. டி. பி. விஜயதுங்காவிற்குக் கிடைக்கும் இவ் இடைக்கால ஜனாதிபதி பதவி அநேகமாக ஓர் இடைக்காலப் பதவியாக இருப்பதற்கான சாத்தியக் கூறுகளே அதிகமாகும். சிறிலங்காவின் ஜனாதிபதிப் பதவி தனது அரசியல் வாழ்வில் கிடைத்தற்கரிய ஓர் உயர்ந்த பதவி என திரு.டி பி. விஜயதுங்கா கருதுவாரேயானால் அவரைப் பொறுத்து இது ஓர் அதிர்ஷ்டமே.

ஆனால், இவ் ஒன்றரை வருட இடைக்கால ஆட்சிப் பருவத்தில் திரு டி. பி. விஜயதுங்கா எதிர்நோக்க வேண்டிய பிரச்சினைகள் பல. இதில் மூன்றாம் உலகநாடுகளுக்கே உரிய பொருளாதார நெருக்கடி, தற்போது சிறிலங்காவிற்கு உரியதான இராணுவச் செலவீட்டால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை என்பனவற்றை விட அவர் இலங்கைக்கே உரியதான வேறு சில முக்கிய பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்தே ஆகவேண்டும்.

இதில் கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக நடந்து வரும் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் இது குறித்து ஏற்கனவே திரு. டி. பி. விஜயதுங்கா தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இதன் பிரகாரம் கடந்த கால ஜனாதிபதிகள் போன்று இராணுவத் தீர்வையே அவர் நாடி நிற்பதாகத் தெரிகின்றது. ஆகையினால், இவர் தனது இடைக்கால ஆட்சியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதையும் காணக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆகையினால் தொடரும் போரும், அதனால் ஏற்படப் போகும் இழப்புக்களுக்கும் விஜயதுங்கா முகம் கொடுத்தே ஆக வேண்டும்.

இரண்டாவதாக, அவர் எதிர்நோக்க வேண்

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும்

# படை நடமாட்டம் அதிகரிப்பு மக்கள் வெளியில்வர அச்சம்

### பிரேமா இறுதிச் சடங்கில் பலர் கலந்து கொள்ளவில்லை

[கொழும்பு]

நேற்று முன்தினம் நடைபெற்ற பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற போது சுதந்திரச் சதுக்கத்தின் பாதுகாப்புப் பொறுப்பை விசேட அதிரடிப் படையினர் (எஸ். ரி. எப்.) பொறுப்பேற்றிருந்தனர். சுதந்திர சதுக்கப் பகுதியிலும், அயல் பகுதிகளிலும் இவர்கள் பரவலாக நிறுத்தப்பட்டிருந்தனர்.

அயல் பகுதிகளில் உள்ள அரசாங்க, தனியார் கட்டடங்களிலும், கூரைகள் மீதும் இவர்கள் நிலை கொண்டிருந்ததைக் காண முடிந்தது

இதே சமயம் கொழும்பு கடற்பகுதியில் கடற்படையின் ரோந்து விசைப் படகுகள் காணப்பட்டன. கொழும்பில் படையினரின் பாதுகாப்பு அதிகமாகக் காணப்பட்டதால் கொழும்பில் வாழும் பல மக்கள் இறுதிநிகழ்ச்சியில் கலந்து கொள்ள அஞ்சி வீடுகளினுள்ளேயே முடங்கிக் கிடந்தனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரேமாவின் இறுதிச் சடங்கில்

## ஜே. ஆர். பங்குபற்றாமை; கடும் சுகவீனம் காரணமாம்

[கொழும்பு]

குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிச் சடங்கிற்கு முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா சமுகம் தரவில்லை.

கடும் சுகவீனம் காரணமாக இவர் இக்கூட்டத்திற்கு சமுகம் தர முடியாமல் போனதாகச் செய்தி ஒன்றை அவர் அனுப்பி வைத்துள்ளார் என்றும் அவரது இரங்கல் அறிக்கையை வாசித்த ஜனாதிபதி செயலர் கே. எஸ். ஜே. விஜேதாசா தெரிவித்தார்.

## வானொலி, ரூபவாஹினி பிரேமாவிற்கு 'விளம்பரம்'

அரசுஉடைமையானவானொலியும், தொலைக்காட்சியும் அரசியல் லாபம்கருதிக் கடந்த மூன்று நாள்களாக ஜனாதிபதி பிரேமதாசா குறித்த செய்திகளை வெளியிட்டது என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

ஆளும் கட்சியான யு.என்.பியின் அரசியல் லாபம் கருதியே பிரேமதாசா பற்றிய செய்திகளுக்கும், இறுதி மரியாதை செலுத்த மக்கள் கூடியதற்கும் அதிக விளம்பரம் தரப்பட்டதாகதெரிவிக்கப்பட்டதுமூன்று நாள்களாக ஜனாதிபதி பிரேமதாசா சம்பந்தமாக பதின்மூன்று மணித்தியால செய்திச் சேவை இடம்பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## பிரேமா இறுதிக் கூட்டத்தில் கண்ணீர் விட்டார்

### கொழும்பு மேயர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல மணிநேரம் தொடர்ந்து பேசும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாகிருலப்பனை கூட்டத்தில் ஏழு நிமிடம் மட்டுமே பேசினார் என்று கொழும்பு மேயர் ரட்ணசிறி ராஜபக்ஸ தெரிவித்தார்.

'என்னை சுட்டு கொல்லுங்கள். ஆனால் என் நற்பெயருக்கு கேடு விளைவிக்காதீர்கள்' என்று கண்ணீர் சிந்தி வேண்டுகோள் விடுத்தார். அதைக் கண்ட மேடையில் இருந்த எல்லோரும் அழுதோம், கூட்டத்திற்கு வந்த பலரும் அழுதனர். எனக்கொழும்புமேயர் மேலும் தெரிவித்தார்.

## அரசின் நட்புக்கரத்தை பற்றிக்கொள்ள தயார்

— காமினி

அரசாங்கம் நீட்டும் நட்புறவுக் கரத்தைப் பற்றிக்கொள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தயராக இருக்கின்றது. ஆனால் இதனை நாம் மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்ளத் தயார் என்று அர்த்தப்படுத்திக்கொள்ளல் ஆகாது

வர் காமினிதிசாநாயக்க தமது இல்லத்தில் செய்தியாளர்களிடம்பேசும்போதுகுறிப்பிட்டார்

அவர் மேலும் கூறுகையில், மாகாணசபைத் தேர்தல்களில்

ஈ. பி. டி. பி. விவகாரம்

## கூரேயின் அறிக்கைக்கு பலத்த ஆட்சேபம்

(கொழும்பு)

கொழும்பில் புலிகளை அடையாளம் காண்பதில் ஈ. பி. டி. பியினர் பொலிசாரால் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று ஐ. தே. க. செயலாளர் சிறிசேனகூரே வெளியிட்ட அறிக்கை ஒன்று தொடர்பாக பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருக்கும் பொலிஸ்மா அதிபர் அதில் மேலும் ஈ. பி. டி. பியினர் மாகாணசபைத் தேர்தல் பிரசார வேலைகளின்போது ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கும் அனுமதிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மாகாணசபைத் தேர்தல்கள் முடிவடையும் வரை மட்டுமே ஈ. பி. டி. பியினர் கொழும்பிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர் என்ற கருத்து ஐ. தே. க வின் அறிக்கைமூலம் புலப்படுகின்றது. ஆனால் அதுவும் தவறானதாகும். மாகாணசபைத் தேர்தலின் பின்பும் அவர்கள் பார்க்வீதி இல்லத்தில் முகாமிட்டுத் தங்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா கூறியுள்ளார்.

## பிரேமாவின் இறுதி வாசகம் பேரணி பதாகையில்

காலஞ் சென்ற ஜனாதிபதி பிரேமதாசா தனது இறுதியுரையில் தெரிவித்த 'என்னை கொலை செய்தாலும் எனது நற்பெயரைக் கொன்று விடாதீர்கள்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பதாகை நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் தாங்கி வரப்பட்டது.

சுச்சரித்த சேவய அமைப்பினர் இந்த வாசகம் பொறிக்கப்பட்ட பதாகையைத் தாங்கி வந்தனர்.

### நெருப்புக் காய்ச்சலால் மரணம்

நெருப்புக் காய்ச்சலில்பாதிக்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 5ம் திகதி அங்கு மரணமானார்

வரணியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான க. ரவிச்சந்திரன் (வயது 23) என்பவரே இவ்விதம் மரணமானவராவார். (30)

நெற்செய்கை ஆரம்பிக்க இருந்தநேரத்தில்

# சுமண நடவடிக்கையினால் 88குடும்பங்கள் வீடிழப்பு

கடந்த மாதம் 9ஆம்திகதி செங்கலடி வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வயல் பகுதிகளில் சிங்கள இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட சுமண இராணுவ நடவடிக்கையினால் மகிலவட்டவானிலிருந்து மக்கள்இடம்பெயர்ந்து உள்ளனர். சுமண இராணுவ நடவடிக்கையினால் இக் கிராமம் 3 தடவைகள் சுற்றிவளைக்கப்பட்டது. இச் சுற்றிவளைப் பின்போது மக்கள் சிங்கள இராணுவத்தினரால் பெண்கள், ஆண்கள் என்ற வேறுபாடின்றி தாக்கப் பட்டுள்ளனர் மூன்று குடும்பத்தலைவர்கள் கைது செய்யப்பட்டும் ஒருவர் காயப்படுத்தப்பட்டும் உள்ளனர். குடியிருப்பு வீடு ஒன்றும் எரிக்கப்பட்டுள்ளது.

வாழ்ந்த தொழில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர் விவசாயிகளின் பொருளாதார மையப்பகுதிகளாக விளங்குகின்ற வார்ரடிச்சசோலை தரவை, 9-ம் கட்டை நாப்பத்தாவில் ஆகிய இடங்களில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதனால் தமிழ் மக்களின் பொருளாதாரம் பாதிப்படைந்து வருகின்றது.

சிறுபோக நெற் செய்கையில் மக்கள் ஈடுபடவிருந்த வேளையில் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையினால் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். சூடுகள் எரிக்கப்பட்டன நெல் மூடைகள் சூட்டுக் களத்தில் இருந்து சிங்கள இராணுவத்தினரால் சூறையாடப்பட்டன. நெல் மூடைகள் விவசாயிகளின் வீடுகளில் இருந்து கொள்ளையிடப்பட்டன.

இரண்டாயிரம் ஏக்கர் விவசாய நிலமும் மக்களால் பயிர் செய்ய முடியாமல் கைவிடப்பட்டுள்ளது.

## கரும்புலிகளின் சாதனைகள் வரலாற்றில் இடம்பெறும்

நினைவுக் கூட்டத்தில் உரை

உரியதான இராணுவச் செலவீட்டால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை என்பனவற்றை விட அவர் இலங்கைக்கே உரியதான வேறு சில முக்கிய பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்தே ஆகவேண்டும்.

இதில் கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக நடந்து வரும் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் இது குறித்து ஏற்கனவே திரு. டி. பி. விஜயதுங்கா தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இதன் பிரகாரம் கடந்த கால ஜனாதிபதிகள் போன்று இராணுவத் தீர்வையே அவர் நாடி நிற்பதாகத் தெரிகின்றது. ஆகையினால், இவர் தனது இடைக்கால ஆட்சியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதையும் காணக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆகையினால் தொடரும் போரும், அதனால் ஏற்படப் போகும் இழப்புக்களுக்கும் விஜயதுங்கா முகம் கொடுத்தே ஆக வேண்டும்.

இரண்டாவதாக, அவர் எதிர்நோக்க வேண்டிய சவால் எதிர்க்கட்சிகளிடம் இருந்து கிளம்பலாம். 1977 ஆம் ஆண்டில் இருந்து பிரேமதாசாவின் மரணம் வரை பலம் பொருந்திய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைகளினால் சீரழிக்கப்பட்ட இவ்எதிர்க்கட்சிகள் ஐ. தே. கட்சி பலவீனமான இடைக்காலத் தலைமை ஒன்றைப் பெற்றுள்ள வேளையில் தாக்குதலுக்குத் தயாராகலாம். இருப்பினும் எதிர்க்கட்சிகள் இடையில் காணப்படும் முரண்பாடுகள் களையப்பட்டு ஐ. தே. கட்சி மீது அவை தாக்குதல் தொடுக்கத் தயாராகுவதற்குமுன் சிலவேளை, திரு. டி. பி. விஜயதுங்காவின் ஒன்றரை வருட கால பதவிக் காலம் முடிவடைந்தும் போய்விடலாம்.

திரு. டி. பி. விஜயதுங்காவை மேலே கூறப்பட்ட இரண்டையும் விடப் பெரிதாகப் பாதிக்கப் போவதும். சர்ச்சைக்கு உள்ளாக்கப் போவதும் ஐ. தே. கட்சிக்குள் ஏற்படப் போகும் அதிகாரப் போட்டியாகும். தற்பொழுதே இப்போட்டி ஏற்பட்டு விட்டமையும், அப்போட்டியே தான் இடைக்கால ஜனாதிபதி ஆவதற்குப் பேருதவியாக இருந்தது என்பதும் அவருக்கு தெரியும்.

தற்போதைய நிலையில் அதிகாரப் போட்டியில் ரணில் விக்கிரமசிங்கா சற்று முன்னணியில் இருப்பதாக சில முடிவுகள் எண்ணவைக்கின்றன. திரு. டி. பி. விஜயதுங்காவிடம் இருந்த அமைச்சுக்களைப் பங்கு போட்டுக் கொண்ட விதத்தில் இருந்தே இதனை ஓரளவு அனுமானித்துக் கொள்ளலாம். ஆனால், காலம் சென்ற பிரேமதாசாவின் மனைவியான ஹேமா பிரேமதாசாவும் அரசியலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் தென்படுவதும். அவர் சிறிசேன கூரேயை ஆதரித்துப் பேசியுள்ளமையும் எதிர்வரும் ஒன்றரை வருட இடைக்கால ஆட்சியின்போது ஐ. தே கட்சிக்குள் அதிகாரப் போட்டி காரணமாகப் பெரும் மோதல்கள் வெடிக்கும் என்பதை கட்டியம் கூறுகின்றன.

இந்நிலையில், இடைக்கால ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்காவிற்கு ஜனாதிபதிப் பதவி என்பது பஞ்சணைப் படுக்கையாக இருக்கும் எனக் கூறிவிட முடியாது. அத்தோடு அண்மைக் காலத்தில் சிறிலங்கா அரசியலில் ஏற்படும் திடீர் ஏற்றஇறக்கங்களும், மாற்றங்களும், இழப்புக்களும் அவரது ஆட்சிக் காலத்திலும் நிகழக் கூடும். இந்நிலையில் இவை யாவற்றிற்கும் திரு. டி. பி. விஜயதுங்கா முகம் கொடுத்தே அவர் தனது இடைக்காலப் பதவியைப் பூர்த்தி செய்ய வேண்டிவரும்.

## கொழும்பு மேயர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல மணிநேரம் தொடர்ந்து பேசும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கிருலப்பனை கூட்டத்தில் ஏழு நிமிடம் மட்டுமே பேசினார் என்று கொழும்பு மேயர் ரட்ணசிறி ராஜபக்ஸ தெரிவித்தார்.

'என்னை சுட்டு கொல்லுங்கள். ஆனால் என் நற்பெயருக்கு கேடு விளைவிக்காதீர்கள்' என்று கண்ணீர் சிந்தி வேண்டுகோள் விடுத்தார். அதைக் கண்ட மேடையில் இருந்த எல்லோரும் அழுதோம், கூட்டத்திற்கு வந்த பலரும் அழுதனர். எனக்கொழும்புமேயர் மேலும் தெரிவித்தார்.

# அரசின் நட்புக்கரத்தை பற்றிக்கொள்ள தயார்

**— காமினி**

அரசாங்கம் நீட்டும் நட்புறவுக் கரத்தைப் பற்றிக்கொள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தயராக இருக்கின்றது. ஆனால் இதனை நாம் மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்ளத் தயார் என்று அர்த்தப்படுத்திக்கொள்ளல் ஆகாது என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினிதிசாநாயக்க தமது இல்லத்தில் செய்தியாளர்களிடம்பேசும்போதுகுறிப்பிட்டார்

அவர் மேலும் கூறுகையில். மாகாணசபைத் தேர்தல்களில் தான் தமதுகட்சி கவனம் செலுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

மாகாணசபைத் தேர்தல் கூட்டம்

# திருமதி லலித்தும் பிரசாரத்தில் இறங்குவார்

(கொழும்பு)

அத்துலத்முதலியின்மனைவி சிறிமானி வரும் மாகாணசபை தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபடவுள்ளார். கணவரின் மரணத்தால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்புவதற்காகவே சிறிமானிதேர்தல் பிரசாரங்களில் ஈடுபடப் போவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பொதுச்செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா கூறினார்.

பாராளுமன்ற ஜனநாயகத்துக்கான கணவரின் போராட்டத்தைமுன்னெடுத்துச்செல்ல சிறிமானிதிடசங்கற்பம்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மாகாணங்களில் நடைபெறவுள்ள 17 முக்கியமான தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டங்களில் சிறிமானி பேசவுள்ளார் என்றும் பிரேமச்சந்திராதெரிவித்தார்.

செங்கலடி வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வயல் பகுதிகளில் சிங்கள இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட சுமண இராணுவ நடவடிக்கையினால் மகிலவட்டவானிலிருந்து மக்கள்இடம்பெயர்ந்து உள்ளனர். சுமண இராணுவ நடவடிக்கையினால் இக் கிராமம் 3 தடவைகள் சுற்றிவளைக்கப்பட்டது. இச் சுற்றிவளைப் பின்போது மக்கள் சிங்கள இராணுவத்தினரால் பெண்கள், ஆண்கள் என்ற வேறுபாடின்றி தாக்கப் பட்டுள்ளனர் மூன்று குடும்பத்தலைவர்கள் கைது செய்யப்பட்டும் ஒருவர் காயப்படுத்தப்பட்டும் உள்ளனர். குடியிருப்பு வீடு ஒன்றும் எரிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்துஇராணுத்தினர் கிராமத்தில் தங்கள் நடமாட்டத்தை அதிகரித்துள்ளனர், இராணுவத்தினரின் நடவடிக்கைக்குப் பயந்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். சுமார் 302 குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தில் 88 குடும்பங்கள் வீடுவாசல்களையும், தோட்டங்களையும் கைவிட்டுவெளியேறி வந்தாறுமூலை கிராமத்துக்குச் சென்றுள்ளனர்.

கடந்த மாத ஆரம்பத்தில் ஏறாவூர் பற்று, கோரளைப் பற்று ஆகிய உதவியரசாங்க அதிபர் பகுதிகளில் உள்ள வயல் பிரதேசங்களில் சுமண இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 45 நாட்களாக தொடருகின்ற இராணுவ நடவடிக்கையினால் வயல் பிரதேசங்களில் மக்கள் ... துவம் வாய்ந்த இடங்களில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர் விவசாயிகளின் பொருளாதார மையப்பகுதிகளாக விளங்குகின்ற வார்ரடிச்சசோலை தரவை, 9-ம் கட்டை நாப்பத்தாவில் ஆகிய இடங்களில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதனால் தமிழ் மக்களின் பொருளாதாரம் பாதிப்படைந்து வருகின்றது.

சிறுபோக நெற் செய்கையில் மக்கள் ஈடுபட விருந்த வேளையில் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையினால் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். சூடுகள் எரிக்கப்பட்டன நெல் மூடைகள் சூட்டுக் களத்தில் இருந்து சிங்கள இராணுவத்தினரால் சூறையாடப்பட்டன. நெல் மூடைகள் விவசாயிகளின் வீடுகளில் இருந்து கொள்ளையிடப்பட்டன.

இரண்டாயிரம் ஏக்கர் விவசாய நிலமும் மக்களால் பயிர் செய்ய முடியாமல் கைவிடப்பட்டுள்ளது.

# கரும்புலிகளின் சாதனைகள் வரலாற்றில் இடம்பெறும்

நினைவுக் கூட்டத்தில் உரை

[வடமராட்சி]

கடலிலும், தரையிலும் பல தாக்குதல்களைச் செய்து வீரசரித்திரம் படைத்தவர்கள் தான் கடற் கரும்புலிகள். இந்த வகையில் பல சரித்திரங்களைப் படைத்தவர்களில் கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் ஆகியோரும் ஒரு வரலாற்றுச் சரித்திரத்தை உருவாக்கியவர்கள்.

இவ்வாறு கடந்த புதன் இரவு 8 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலையத்தில் கடற்புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சாரூபன் தலைமையில் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் நினைவாக நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆரம்ப காலத்தில் படகுகளின் தொழில் நுட்பத்தைத்தெரியாதிருந்த நாங்கள், இன்று தொழில் நுட்பத்தைக் கொண்டு புதிய படகுகளை இயக்கக் கூடிய வகையில் வளர்ச்சி பெற்றிருக்கிறோம். இதற்கு மாவீரர்களின் பெற்றோரும், வேங்கைகளினதும் ஆதரவும் உறுதுணையாக இருந்திருக்கின்றன.

கரும்புலித் தாக்குதல்களை உலகில் எந்த ஆயுத சக்திகளாலும் தடுத்து நிறுத்த முடியாது. தமிழீழம் மலரும் வேளையில் தமிழீழப் பதிவேட்டில் கரும்புலிகளின் சாதனைகள், வரலாறுகள் இடம் பெறும்.

கடந்த வருடம் வீரச்சாவடைந்த கடற்புலிகளின் பெயர்கள், அவர்களது இடங்கள், தாக்குதல்கள், எவ்வாறு வீரச்சாவடைந்தனர் என்பது பற்றியும் விளக்கினார்.

தொடர்ந்து பொது நிர்வாகத் தொடர்பாளரான திரு. மறவன், கடற்புலிகள் அரசியல் நிர்வாக மகளிர் பொறுப்பாளர், கடற்புலிகள் வடமராட்சி அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. சங்கீதன், கடற்புலிகள் பிரமுகர் திரு. புலியரசன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

மற்றும் மாவீரரின் உருவப் படங்களுக்குப் பெற்றோர், உறவினர் மலரஞ்சலி, தீபஞ்சலி செலுத்தினர். கடந்த 4 ஆம் திகதி பருத்தித்துறை இறங்குதுறையில் கடற் கரும்புலிகள் நினைவாக நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது. கடற்புலிகளின் மாவீரரின் பெற்றோரும், மற்றும் தமிழீழக் கடற்புலிகள் தளபதி திரு. கங்கை அமரன், வன்னி மாவட்ட கடற்புலிகள் விசேட தளபதி திரு. தேவன் ஆகியோரும் வெற்றி பெற்ற கழகங்களுக்குச் சான்றிதழும், தங்கப் பதக்கமும் வழங்கினர்.

தொடர்ந்து கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

[யோ]

# சீன ஏவுகணைப் பாகங்கள் பாகிஸ்தானுக்கு விநியோகம்

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு சீனா ஏவுகணை உதிரிப்பாகங்களை இரகசியமாக விநியோகித்துள்ளதாக நம்பகமான ஆதாரங்களை அமெரிக்க புலனாய்வுத் துறையினர் பெற்றுள்ளதாக நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த ஏவுகணை உதிரிப் பாகங்கள் சீனாவிலிருந்துகடல் மார்க்கமாக பாகிஸ்தானுக்கு கொண்டு செல்லப்பட்டமை செய்மதியிலிருந்து எடுத்த படங்களில் தெளிவாக தெரிகின்றது என அப்பத்திரிகையின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனா பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ள இந்த ஏவுகணை உதிரிப்பாகங்கள் மூலம் பாகிஸ்தான் இப்போது சீனத்தயாரிப்பு எம்-11 ஏவுகணையை தயாரிக்கும் நிலையை அடைந்துள்ளது சீன எம்-11 ஏவுகணை 300 கிலோமீற்றர் வீச்செல்லை கொண்டது அணு ஆயுதங்களையும் காவிச்செல்லக்கூடியது

இதேவேளை இத்தகவல்கள் குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருவதாகவும் இவை உண்மை என கண்டு பிடிக்கப்பட்டால் பாகிஸ்தானுக்கு எதிராக வர்த்தக தடை உட்பட பல தடைகளை அமெரிக்கா கொண்டுவரும் என்றும் அமெரிக்க அரசபேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வாஷிங்டனில் உள்ள சீனத் தூதரகம் இவற்றை மறுத்துள்ளது.

# ஈரான் அணு வல்லமை இஸ்ரேல் தருக்கும்

(ஜெருசலேம்)

ஈரான் அணு ஆயுத நாடாக வருவதை தடுக்க மேற்கு நாடுகள் முதலில் முன்வராவிட்டால் இஸ்ரேல் தனியாக ஈரானை தடுத்து நிறுத்த வேண்டியிருக்கும்என இஸ்ரேல் ஆளும்கட்சி எம். பி. எப்ரய்ம் ஸ்நே அறிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுத பலம் பெறுவதை தடுக்க மேற்கு நாடுகள் முயலாவிடின் இஸ்ரேல் தனது பாதுகாப்பைக் கருதி தக்க நடவடிக்கை எடுக்கும் நிலை ஏற்படும் என்பதை மேற்கு நாடுகள் உணர வேண்டும் என ஸ்நே கூறினார்.

இன்னும் 10 ஆண்டுகளில் இஸ்ரேலை அடையக்கூடிய அணு ஆயுதங்களை ஈரான் பெற்றிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# லலித்தின் ஒலிப்பதிவு லண்டனுக்கு சென்றது

[கொழும்பு]

லலித் அத்துலத் முதலியின் உமிழ்நீரும், கிரிலப்பனைக் கூட்டத்தில் அவரின் பேச்சுப் பதிவுசெய்[illegible]நாடாவும் விசேட பரிசோதனைக்காக லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதே வேளை. கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம் அத்துலத்முதலி கொலை தொடர்பாகக் கிடைக்கும் தகவல்களை ஸ்கொட்லண்ட்யார்ட் துப்பறியும் நிபுணர்களுக்கு வழங்கும் என்று ஸ்தானிகராலய ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார். இதுவரை அத்துலத் முதலி கொலைதொடர்பாகத் தமக்கு ஒரு அநாமதேயத் தொலைபேசிஅழைப்புக்கிடைத்துள்ளததாகப் பிரதி உயர் ஸ்தானிகர் றோனால்ட்நாஸ் தெரிவித்தார்.

ஈழநாதம்

# அரசியலில் பிரவேசிக்க ஹேமா பிரேமதாசா திட்டம்

(கொழும்பு)

குண்டுவெடிப்பில் பலியான சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மனைவி திருமதி ஹேமா பிரேமதாசா தாம் அரசியலில் இறங்கவுள்ளதாக அறிக்கை விடுத்துள்ளார் என இந்திய வானொலி அறிவித்தது.

தமது கணவரின் பணியை எதிர்காலத்தில் முன்னெடுக்கப் போவதாக திருமதி ஹேமா பிரேமதாசா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''ஜனாதிபதி பிரேமதாசாவின் பணிகளை முன்னெடுத்துச்செல்ல எனக்கு உதவுங்கள். எனது கணவருக்கு உதவியவர் சிறிசேன கூரே'' இவ்வாறு திருமதி ஹேமா பிரேமதாசா தெரிவித்தார். நேற்று முன்தினம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற பிரேமதாசாவின் இறுதிக்கிரியைகளின்போது அவர் இறுதியில் நன்றியுரை ஆற்றினார்.

ஹேமாவின் இந்த உரை பற்றி கருத்துத் தெரிவித்த பி. பி. ஸியின் செய்தியாளர் ஜஸ்வந்தர் சிங், ஹேமாவின் உணர்ச்சிகரமான நீண்டபேச்சின் இவ்வரிகள் அவரின் எதிர்கால அரசியல் அபிலாசையை தெளிவாகக் காட்டுவதாக அமைகின்றது எனக் குறிப்பிட்டார். ஹேமா பிரேமதாசா ஏற்கனவே பல சமூக சேவை நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்குபற்றி வந்துள்ளார். அவர் தற்போது சேவா வனிதா எனும் மகளிர் அமைப்பின் தலைவியாகச் செயற்படுகிறார் எனச் சுட்டிக்காட்டிய ஜஸ்வந்தர்சிங், உபகண்ட அரசியல் நிலைமையில் காலஞ்சென்ற தம் கணவரின் அரசியல் வாழ்வில் அவர் இறங்குவது புதுமையான ஒன்றல்ல எனவும் குறிப்பிட்டார்.

இதேசமயம் ஹேமாவின் இந்த உரையை மேற்கோள் காட்டிய இந்தியப் பத்திரிகையான 'பயனியர்' தமது கட்சியைத் தாம் வழி நடத்திச் செல்லப்போவதாக திருமதி பிரேமதாசா குறிப்பிட்டார் என செய்தி வெளியிட்டுள்ளது

## ஹேமா பிரேமதாசாவிற்கு மந்திரிப் பதவி கிடைக்கும்?

[கொழும்பு]

மரணமடைந்த ஆர். பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசவிற்கு மந்திரிசபையில் இடம் அல்லது மாகாண சபையில் பதவி கிடைக்கலாம் என ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் பிரசார கருவியாக இவரை ஐ. தே. க. பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது'

## இடமாற்றப்பட்ட அதிகாரி சுகவீன லீவில்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் அரசியலில் தலையிட்டார் என்பதற்காக குருநாகலில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் சுப்ரின்டென்ட் சுகவீன லீவில் நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது ஆனால் அவர் கொழும்பில் இருப்பதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பந்தப்பட்ட பொலிஸ் சுப்ரின்டென்ட் எடிசன் குணத்திலக மீது விசாரணையை மேற்கொள்ளுமாறு எதிர்க் கட்சிகள் கோரியுள்ளன.

## காயமடைந்த இளைஞர் ஆஸ்பத்திரியில் கைது

(கொழும்பு)

வெடிமருந்தினால் ஏற்பட்ட காயங்களுக்காக நுவரெலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரினால் விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

27 வயதான இவர் இருபிள்ளைகளுக்கு தந்தையாவார் வெதமுல்லவைச் சேர்ந்த இவர் தோட்டத்தொழிலாளி என பொலிசார் தெரிவித்தனர். வெடிகொளுத்திய

இவரிடம் எத்தகைய வெடிப் பொருள்கள் இருந்தது என்பதை அறிய நாம் முயன்று வருகின்றோம் என பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## மோட்டார் ஊர்திப் பதிவு அடுத்த கட்டம் ஆரம்பம்

சிறிலங்கா மோட்டார் ஊர்திப் பதிவுச் சான்றிதழ் இறக்குமதிச் சிட்டை உள்ளோர்க்கான யாழ்ப்பாண உதவி அர

10-05-93லிருந்து சிறிலங்கா மோட்டார் ஊர்திப் பதிவுச் சான்றிதழ் இல்லாத அல்லது வேறு சான்றுகள் இல்லாதவர்களும் பதிவுகளை மேற்கொள்

## கம்பியால் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வேப்பம் பூ பொறுக்கியதற்காக அயல்வீட்டுச் சிறுவன் ஒருவனை இரும்புக் கம்பியால் தாக்கிய சம்பவம் ஒன்று ஆறு கால்மடத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் அ. சுபாஸ்கர் (வயது 7) வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இச் சம்பவம் குறித்து தமிழீழக் காவல் துறையினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# அமைதிப்படைத் தளபதி ஹெலி விபத்தில் பலி

## மனைவியுடன் மேலும் ஏழு அதிகாரிகள் பலி

(டில்லி)

பூட்டானில் நேற்று நிகழ்ந்த ஹெலிகொப்டர் விபத்து ஒன்றில் இந்திய இராணுவத்தின் கிழக்குப் பிராந்திய தளபதி லெப்.ஜெனரல் ஜமீல் மஹ்முத் அவரது மனைவி உட்பட ஒன்பது பேர் மரணமடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இலங்கைக்கு வந்த இந்திய அமைதிப்படைக்கு கிழக்கு மாகாணத்தில் தலைமை தாங்கியவர், இதற்காக இவருக்கு பதக்கம் வழங்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது.

இவருடன் இவரது உதவியாளர் எம். எச். அகமதும் இவ்விபத்தில் பலியானார். ஏனைய ஆறுபேரும் இராணுவ அதிகாரிகள்.

எம். ஐ. எட்டு ரகஹெலிகொப்டரில் இந்த ஒன்பது பேரும் பூட்டானுக்கு அரச முறைப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் ஒன்பது பேரின் உடல்களும் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும், விபத்து பற்றிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

## கண்டெடுத்த துப்பாக்கியால் லலித் சுடப்பட வில்லை

லலித் அத்துலத் முதலி துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான கிருலப்பனை கூட்டமேடைக்கு அருகே கண்டெடுக்கப்பட்ட நான்கு வெற்று ரவைகளும் பரபின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. கிருலப்பனை முகலன் வீதியருகே கண்டெடுக்கப்பட்ட சடலத்தின் அருகே காணப்பட்ட துப்பாக்கியும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இந்தப்பரிசோதனைகளின்மூலம்லலித்தின் உடலைத் துளைத்துச்சென்ற துப்பாக்கிரவை சடலத்தின் அருகே காணப்பட்ட துப்பாக்கிக்கும் தொடர்பு இருப்பதாக தெரியவில்லை என்று அரசாங்கப் பகுப்பாய்வு திணைக்களம் கூறியுள்ளது.

## சைக்கிளில் வந்தவரை மொஹிடீன் தடுத்தபோது குண்டு வெடித்தது

(கொழும்பு)

''ஜனாதிபதி பிரேமதாசா ஆமர்வீதிச் சந்தியில் ஊர்வலத்தை நெறிப்படுத்திக் கொண்டிருக்கும்போது மெசன்ஜர்வீதி வழியாக ஒருவர் மெதுவாகத் துவிச்சக்கர வண்டி ஒன்றில் வந்துகொண்டிருந்தார். அவர் ஜனாதிபதியை மோதும் விதத்தில் வரும்போது, ஜனாதிபதியின் அந்தரங்க உதவியாளர் மொஹிடீன் துவிச்சக்கர வண்டியின் ஹேண்டிலைப் பிடித்து ஓரமாகப் போகும்படி சமிக்ஞை செய்தபோது பெரும் வெடிச்சத்தம் கேட்டது''

இவ்வாறு ஆமர் வீதியில் இடம்பெற்ற மேதினஊர்வலத்தின் போது ஜனாதிபதி உட்பட மற்றும் 24பேரின் மரணம் தொடர்பாக இடம்பெற்ற விசாரணையில் இலங்கை தேசிய நூல்நிலைய சபையின் காரியக்குழு பணிப்பாளர் கீர்த்தி சொய்சா தெரிவித்தார், அவர் மேலும் கூறுகையில், ஐ தே. கட்சியின் மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக அவிசாவளையியூடாக வந்து இணையும் மற்றொரு ஊர்வலத்தைசுகததாச விளையாட்டரங்கில் வந்த ஊர்வலத்துடன் சேர்ந்து ஒழுங்குபடுத்தும் வேலைகளை முன்னின்று செய்துகொண்டிருந்தார். இச்சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகளும் அவரருகில் காணப்பட்டனர்.

அப்போது நேரம் 12.45 மணியை நெருங்கியிருந்தது. அவ்வேளை மெசஞ்சர் வீதி வழியாக ஒருவர் துவிச்சக்கர வண்டியில் ஏறி மெதுவாக வந்துகொண்டிருந்தார். அவர் ஊர்வலத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த ஜனாதிபதியின் மேல் மோதுவதுபோல் அவர் அருகே வந்தார். அப்போது நான் ஜனாதிபதி நின்ற இடத்திலிருந்து ஐந்து யார் தூரத்தில் நின்றுகொண்டிருந்தேன்.

மொஹிடீன் இச்சந்தர்ப்பத்தில் துவிச்சக்கரவண்டிக்காரரின் ஹேண்டிலைப் பிடித்து ஓரமாகும்படி சமிக்ஞைசெய்

சத்தம் கேட்டது. சம்பவம் நடந்த இடத்திற்கும், ஜனாதிபதி நின்றஇடத்திற்கும் சுமார் 3 யார் தூரம் இருக்கலாமென நினைக்கிறேன்.

அந்த ஓசையோடு என்மீது இரத்தமும், மாமிசத் துண்டுகளும் வந்துவிழுந்தன ஆனால் எனக்கு எவ்வித காயமும் எற்படவில்லை. அப்போதுமக்கள் பயத்தினால் சிதறியோடினர். எனக்குப் பெரும்பயம் ஏற்பட்டது. ஜனாதிபதியைப் பார்த்தபோது அவர் காணப்படவில்லை

காயமடைந்த 12 பேர்வரை விழுந்துகிடப்பதைக்கண்டேன் சைக்கிளில் வந்த நபரைக் கண்டால் என்னால் அவரைஅடையாளம்காட்டமுடியும். அரைக்கை சேட்டும, நீண்ட காற்சட்டையும் அணிந்துகாணப்பட்ட அவர், முடியை வெட்டிப் பின்னோக்கிச்சீவியிருந்தார். அவர் ஓரளவு ஒல்லியான உடலை உடையவர்.

சரத்மஹிந்தவினதும், மொஹிடீனதும் சடலங்களை நான் அடையாளம் கண்டு கொண்டேன் என்றார்.

## காயமடைந்த பெண் மரணமானார்

(தென்மராட்சி)

புலோப்பளையில் நடைபெற்றவாகனவிபத்தொன்றில் சிக்குண்ட பெண்மணி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற சம்பவத்தின்போது ரி. செபமாலை (வயது50) என்ற பெண்மணியே மரணமடைந்துள்ளார். சம்பவதினம் இரவு 7 மணியளவில் மேற்படி நபர் வீட்டிலிருந்து வீதிக்குச்சென்றபோது விபததுநடைபெற்றது. இவ் விபத்தில் காயமடைந்த இவர் நேற்று முன்தினம்மரணமடைந்துள்ளார். (86)

## கண்டனம்

(பிரங்ஸலிஸ்)

பிரேமதாசாவின் கொலையைக் கண்டித்து ஐரோப்பிய பொருளாதார சமூகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. நேற்று முன்தினம் பிரங்ஸலிசில் வெளியிடப்பட்ட அவ் அறிக்கையில் அதிபராக பதவி ஏற்றிருக்கும் டி. பி. விஜயதுங்கவிற்கு ஆதரவு தெரிவித்துள்ளது

## நாட்டுக்கூத்து விழா

(குருநகர்)

திருமறைக் கலா மன்றம் யாழ்-பிரதான வீதி கலையரங்கில் நடாத்தும் நாட்டுக்கூத்து விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 6-45 மணிக்கு யாழ். உதவி அரச அதிபர் திரு க. குணராசா தலைமையில் ஆரம்பமாகும்.

''கூத்துக்கள் அன்றும் இன்றும்'' என்னும் சிறப்புரையை கலாநிதி காரை செ. சுந்தரம் பிள்ளை வழங்குவார்.

நாட்டுக் கூத்துக் கலைஞர்களைக் கௌரவித்ததைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திச் சங்கம் வழங்கும்''வீமன் புஸ்ப யாத்திரை'', ''அருச்சுனன் பாசுபதாஸ் பெறல்'', யாழ் கலைக்கூடம் வழங்கும் ''காத்தவ

# காயமடைந்த இளைஞர் ஆஸ்பத்திரியில் கைது

(கொழும்பு)

வெடிமருந்தினால் ஏற்பட்ட காயங்களுக்காக நுவரெலிய வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரினால் விசாரணைக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளார்.

27 வயதான இவர் இருபிள்ளைகளுக்கு தந்தையாவார் வெதமுல்லவைச் சேர்ந்த இவர் தோட்டத்தொழிலாளி என பொலிசார் தெரிவித்தனர். வெடி கொளுத்திய போதே தாம் காயமடைந்த தாக இவர் பொலிசாருக்கு தெரிவித்துள்ளார்.

இவரிடம் எத்தகைய வெடிப் பொருள்கள் இருந்தது என் பதை அறிய நாம் முயன்று வருகின்றோம் என பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

... பதாகத் தெரிவிக்கப்படுகிறது ஆனால் அவர் கொழும்பில் இருப்பதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பந்தப்பட்ட பொலிஸ் சுப்ரின்டென்ட் எடிசன் குணதிலக மீது விசாரணையை மேற்கொள்ளுமாறு எதிர்க் கட்சிகள் கோரியுள்ளன.

# மோட்டார் ஊர்திப் பதிவு அடுத்த கட்டம் ஆரம்பம்

சிறிலங்கா மோட்டார் ஊர்திப் பதிவுச் சான்றிதழ் இறக்குமதிச் சிட்டை உள்ளோர்க்கான யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுகள் இன்றுடன் முடிவடைகின்றன.

10-05-93லிருந்து சிறிலங்கா மோட்டார் ஊர்திப் பதிவுச் சான்றிதழ் இல்லாத அல்லது வேறு சான்றுகள் இல்லாதவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

... தில் வந்துகொண்டிருந்தார். அவர் ஜனாதிபதியை மோதும் விதத்தில் வரும்போது, ஜனாதிபதியின் அந்தரங்க உதவியாளர் மொஹிடீன் துவிச்சக்கர வண்டியின் ஹேண்டிலைப் பிடித்து ஓரமாகப் போகும்படி சமிக்ஞை செய்தபோது பெரும் வெடிச்சத்தம் கேட்டது''

இவ்வாறு ஆமர் வீதியில் இடம்பெற்ற மேதினஊர்வலத்தின் போது ஜனாதிபதி உட்பட மற்றும் 24பேரின் மரணம் தொடர்பாக இடம்பெற்ற விசாரணையில் இலங்கை தேசிய நூல்நிலைய சபைப்பாளர் காரியக்குழு பணிப்பாளர் ரோத்தி சொய்சா தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், ஐ.தே. கட்சியின் மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக அவிசாவளையிலிருந்து வந்த நான் சுகததாச விளையாட்டுத்திடலுக்கு அருகே அவிசாவளையிலிருந்து வரும் கோஷ்டியை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். பகல் 12 மணியளவில் ஊர்வலம் ஆரம்பமானது. அவிசாவளைகோஷ்டி வரகாலதாமதமானதால்நான் ஊர்வலத்தோடு சேர்ந்துவந்து கொண்டிருந்தேன்.

ஆமர் வீதியை ஊர்வலம் நெருங்கும்போது ஜனாதிபதி அங்கே வந்து மஸன்கஸ் வீதி

... ருந்தார். இச்சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகளும் அவரருகில் காணப்பட்டனர்.

அப்போது நேரம் 12.45 மணியை நெருங்கியிருந்தது. அவ்வேளை மெசஞ்சர் வீதி வழியாக ஒருவர் துவிச்சக்கர வண்டியில் ஏறி மெதுவாக வந்துகொண்டிருந்தார். அவர் ஊர்வலத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த ஜனாதிபதியின் மேல் மோதுவதுபோல் அவர் அருகே வந்தார். அப்போது நான் ஜனாதிபதி நின்ற இடத்திலிருந்து ஐந்து யார் தூரத்தில் நின்றுகொண்டிருந்தேன்.

மொஹிடீன் இச்சந்தர்ப்பத்தில் துவிச்சக்கரவண்டிக்காரரின் ஹேண்டிலைப் பிடித்து ஓரமாகும்படி சமிக்ஞைசெய்தார். அப்போதுபெரும்வெடிச்

... இரத்தமும், மாமிசத் துண்டுகளும் வந்துவிழுந்தன ஆனால் எனக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை. அப்போதுமக்கள் பயத்தினால் சிதறியோடினர். எனக்குப் பெரும்பயம் ஏற்பட்டது. ஜனாதிபதியைப் பார்த்தபோது அவர் காணப்படவில்லை

காயமடைந்த 12 பேர்வரை விழுந்துகிடப்பதைக்கண்டேன் சைக்கிளில் வந்த நபரைக் கண்டால் என்னால் அவரைஅடையாளங்காட்டமுடியும். அரைக்கை சேட்டும், நீண்ட காற்சட்டையும் அணிந்துகாணப்பட்ட அவர், முடியை வெட்டிப் பின்னோக்கிச்சீவியிருந்தார். அவர் ஓரளவு ஒல்லியான உடலை உடையவர்.

சரத்மஹிந்தவினதும், மொஹிடீனதும் சடலங்களை நான் அடையாளம் கண்டு கொண்டேன் என்றார்.

## நாட்டுக்கூத்து விழா

(குருநகர்)

திருமறைக் கலாமன்றம் யாழ்-பிரதான வீதி கலையரங்கில் நடாத்தும் நாட்டுக் கூத்து விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 6-45 மணிக்கு யாழ். உதவி அரச அதிபர் திரு க. குணராசா தலைமையில் ஆரம்பமாகும்.

''கூத்துக்கள் அன்றும் இன்றும்'' என்னும் சிறப்புரையை கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை வழங்குவார்.

நாட்டுக் கூத்துக் கலைஞர்களைக் கௌரவித்ததைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திச் சங்கம் வழங்கும்''வீமன் புஸ்ப யாத்திரை'',''அருச்சுனன் பாசுபதம் பெறல்'', யாழ் கலைக் கூடம் வழங்கும் ''காத்தவராயன்'' (சிந்துநடைக் கூத்து) ஆகியன மேடையேறும். (21)

## மரண அறிவித்தல்



## மிக்கேல் பிலேந்திரன்

குருநகரைச் சேர்ந்த மிக்கேல் பிலேந்திரன் அவர்கள் 03-05-1993 கடந்த திங்கட்கிழமை நோர்வேயில் அகால மரணமானர்.

இவர் திருமதி றூபினா பிலேந்திரன் அவர்களின் அன்புக் கணவரும், திரு. திருமதி மிக்கேல்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், திரு. யேசுதாசன் (செல்வா ஹாட்வெயர் உரிமையாளர்), Dr. தூயமணி(முன்னாள் யாழ்.போதனா வைத்தியசாலை, பல்வைத்திய நிபுணர்), திரு. முத்துக்குமார், திருமதி வசந்தமாலை யேசுதாஸ் (பிரான்ஸ்), திருமதி முத்துராணி ஜெயக்குமார், காலஞ்சென்றவரான தயாளன், திருமதி சோதிமலர் ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. திருமதி கிறேஷியன் தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார். அவரது நல்லடக்கம் நோர்வேயில் நடைபெற்றது.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 10-05-1993 திங்கட்கிழமை காலை 6-00 மணிக்கு புனிதயாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 10-05-93இல் நடைபெறும் திருப்பலியில் கலந்து அன்னாரின் ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திக்கவும் வேண்டுகிறோம்.

இல. 2, ஓடக்கரை வீதி,<br>குருநகர்,<br>யாழ்ப்பாணம்.

தகவல்:<br>திரு. திருமதி மிக்கேல்பிள்ளை<br>குடும்பத்தினர்.

(சி/6587)

## எதிர்க்கட்சியினர் கலந்துகொள்ளவில்லை

[கொழும்பு]

மரணமடைந்த சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதி ஊர்வலத்திலும் இறுதிக் கிரியைகளிலும் எதிர்க் கட்சி முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொள்ளவில்லை என தெரியவருகிறது.

இதேவேளை இவ் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட மக்களின் தொகையும் அதிகமல்ல என செய்திகள் தெரிவிக்கின்றன.

ரணில்

மற்றும் மனிதவலு, தேசிய சேவை அமைச்சர் பதவி வகித்தார்.

6 மார்ச் 1989 இல் (ஒன்பதாவது பாராளுமன்ற) சபைத் தலைவராகவும், அவைத் தலைவராகவும் கடமையாற்றினார். அத்துடன் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சராகவும் இருந்தார்.

## யாழ்-வன்னி தொடர்பு மூன்று இடங்களில் செயலகம்

நெருக்கடிகால யாழ்-வன்னி தொடர்பு சேவைக்கான செயலகங்கள் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்துக்கு அண்மையிலும் (முன்னைய காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கட்டடம்). கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையிலுள்ள கட்டடத்திலும், மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கும் என தமிழீழ விடுதலைப் புலிகள் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இச்செயலகங்கள் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணிவரையும், மாலை 1-30 மணி தொடக்கம் 5 மணிவரையும் வாரத்தின் ஏழு நாட்களும் இயங்கும்.

## கூடிய அதிகாரங்கள்

டி.பி விஜயதுங்கா தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கும் அமைச்சர்களுக்கு முன்னரைவிட கூடுதலான அதிகாரங்கள் இனிமேல் கிடைக்கும் என்று கொழும்பு அரசியலை உற்று நோக்கும் அவதானிகள் கூறியுள்ளனர்.


ஸ்ரீதர் திரையரங்கில்

**In the Line of Duty**

தினசரி மாலை 4 மணி, 6 மணி<br>சனி, ஞாயிறு தினங்களில்<br>காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6575]


## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 07-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9308

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

22-7406, 26-8051, 24-8353, 24-6480, 24-5137, 27-7822, 26-6320, 27-8160, 28-4354, 24-7327, 26-8746, 24-4238, 41-9480, 26-3294.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-5517, 41-9167, 26 6077, 27-9649, 22-3611, 27-5187, 26-0736, 24-6065, 28-8177, 28-0429, 26-3068, 26-7353.

## ஜனாதிபதி

காணப்படும் வன்முறைச் சூழலுக்கு எதிர்ச் சக்திகள் தான் காரணம் என்று சுலபமாக கூறிவிட்டாலும் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசுகளுக்கும் இதில் பங்கு உண்டு என்பதை மறுக்க முடியாது.

எனினும் பிரேமதாசாவைப் போல கடுமையான போக்கை கடைப்பிடிக்காமல் விஜயதுங்கா மிதமான போக்கையே கடைப்பிடிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த சிலஆண்டுகளாக இலங்கை அரசியலில் காணப்பட்ட கொடிய தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகள் தணியக்கூடும் என்றும் நம்பப்படுகிறது.

இதேவேளை விஜயதுங்கா அரசுக்கு சமாளிக்கவேண்டிய முக்கிய பிரச்சினையாக வடக்கு கிழக்கு பிரச்சினை இருக்கின்றது விடுதலைப் புலிகளுடன் பேசுவது என்று விஜயதுங்கா கூறியிருந்தாலும் இது கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகப் பிரேமதாசாவும் பாடிய பல்லவிதான்.

இதனிடையே புலிகளுக்கு எதிராக நடத்தும் போரில் மேலும் சுதந்திரமாக செயற்பட இராணுவம் விஜயதுங்காவை நெருக்கக்கூடும். பிரேமதாசா கொலைக்கு புலிகள் தான் காரணம் என்று இராணுவம் கொண்டிருக்கும் சந்தேகத்தை அரசு உறுதிப்படுத்துமானால் இது மேலும் அதிகரிக்கலாம்.

எனினும் இலங்கையில் பலர் வேறுவிதமாகத் தான் எண்ணுகிறார்கள். வேறு பல சதித்திட்டங்கள் இந்தக்கொலைக்கு காரணமாக இருக்கும் என்று கொழும்பு நகரில் பலரும் கருதுகின்றனர்

மேலும் நீண்ட கால அடிப்படையில் பிரேமதாசாவின் வாரிசு பூசல் தோன்றினால் அதில் மேலும் வன்முறைகள் இடம் பெறலாம் என்றும் கிறிஸ் மொறிஸ் தமது ஆய்வுக் கண்ணோட்டத்தில் கூறியுள்ளார்.

## புதிய

பி. தயாரத்தினா - புனர்வாழ்வு, புனர்நிர்மாண சமூகநல விருத்தித்துறை அமைச்சு.<br>
ஜோசப் மைக்கல் பெரேரா - கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சு.<br>
டபிள்யூ ஜே. எம். லொக்குபண்டார - கலாசார அமைச்சு, தகவல்துறை அமைச்சு.<br>
அலுக் அலுவிகார - துறைமுக, கப்பல்துறை அமைச்சு.<br>
நந்தா மத்தியூ - இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சு.<br>
ஏ. ஆர். மன்சூர் -வர்த்தக, வாணிபத்துறை அமைச்சு<br>
யு. பி. விஜேகோன் - கைத்தறி புடைவைத்தொழில் அமைச்சு<br>
திருமதி ரேணுகா ஹேரத் - சுகாதார, மகளிர் விவகார அமைச்சு.<br>
ஏ. எம். எஸ். அதிகாரி - தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சு.<br>
சிறிசேனகூரே - வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு.<br>
சந்திரா பண்டார - மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சு.<br>
ஹரோல்ட் ஹேரத் - வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.<br>
வீரசிங்க மல்லிமாராச்சி - உணவுக் கூட்டுறவுத்துறை ஜனசவிய துறை அமைச்சு.<br>
ரூபா கருணாதிலக்க - பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சு.<br>
தர்மதாச பண்டா - விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சு.<br>
காமினி அத்துகோரளை - காணி,காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சு<br>
விமல் விக்கிரமசிங்க - சுற்றாடல் அபிவிருத்தி, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு.

சபை முதல்வராக ரணில் விக்கிரமசிங்க பணிபுரிவார்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 08 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.